# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

***********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ).
முறையீட்டு மனு எண்: 224/2018/பே
ஆணை நாள் 14–05–2019

திரு. அ.வீராராஜன்,
96–B, தேவர் திருநகர்,
நெல்லூர்,
ஆத்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்–624204. — முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
முன்னாள் செயல் அலுவலர், மற்றும்
துப்புரவு ஆய்வாளர்,
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். –– எதிர் மனுதாரர்கள்.

## ஆணை.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி, 96–B, தேவர் திரு நகர், நெல்லூர், ஆத்தூர் வட்டம் பகுதியினைச் சேர்ந்த திரு.அ.வீராராஜன் என்பவரது 24.10.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.10.2018ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 224/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும், பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், நிலக்கோட்டை டவுன் புல எண். 471/19, வெங்கட்ராமபுரம் அக்ரஹாரத் தெருவில் தனக்கு சொந்தமான 8.5.93 இலக்கமிட்ட ஒட்டு வீட்டிற்கு கிழக்கு பக்கம் திரு.ஜாபர்சாயபு மகன் திரு.முஸ்தபா, (ஆசிரியர்) என்பவர் அவரது வீட்டிற்கு பின்புறம் உள்ள காலிமனையில் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதாகவும், மேற்படி கட்டிடம் கட்டிட விதிகளுக்கு புறம்பாக வெளிப்புறத்தில் போதுமான அளவுக்கு திறந்த வெளியிடம் அமைக்காமலும் தனது புல எல்லைக்குள் கட்டிடம் கட்ட முயற்சிப்பதாகவும், பேரூராட்சித் துப்புரவு ஆய்வாளர் திரு.ஜாபர் அலி என்பவர் துணைபுரிவதாகவும் தெரிவித்து தனது முறையீட்டு மனுவினை விசாரணை கோரி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

02.11.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

07.12.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பான 24.01.2019 நாளிட்ட விசாரணைக்கு ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரர், நிலக்கோட்டை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.முருகேசன், தற்போதைய செயல் அலுவலர் மற்றும் நிலக்கோட்டை பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் ஆகியோர்களுக்கு அழைப்பாணையிடப்பட்டது.

நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் 22.01.2019 நாளிட்ட கடிதத்தில் (மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது) மேற்படி 24.01.2019 அன்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரகத்தில் ஓய்வு பெறவுள்ள செயல் அலுவலர்கள் மீதான தணிக்கைத் தடை கூட்டமர்வில் கலந்து கொள்ளுமாறு திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் 21.01.2019 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளதால் மேற்படி விசாரணைக்கு ஆஜராகாத நிலை உள்ளதாகவும், இப்பொருள் தொடர்பாக வேறொரு நாளில் விசாரணை நிர்ணயிக்குமாறும் கேட்டக் கொள்ளப்பட்டது. மேலும் முறையீட்டு மனுதாரர் மேற்படி பொருள் தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் நீதிப்பேராணை எண்.23416/2018ன்படி வழக்கு தொடுத்துள்ளதாகவும் தெரிவித்து செயல் அலுவலர் அதற்கான வாதுரை நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

07.12.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 24.01.2019 அன்று ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் 24.10.2018 நாளிட்ட புகார் மனு தன்னால் அனுப்பப்பட்டதெனவும், நிலக்கோட்டை டவுன் புல எண். 471/9 வெங்கட்ராமாபுரம் அக்ரஹாரம் தெருவில் தனது சொந்த வீட்டின் கிழக்குப் பக்கம் திரு.ஜாபர் சாயபு மகன் திரு முஸ்தபா (ஆசிரியர்), தனது வீட்டிற்கு பின்புறம் உள்ள காலி மனையில் விதிகளுக்கு புறம்பாக கட்டிடம் கட்ட முயற்சி செய்ததாகவும், தான் செயல் அலுவலருக்கு 16.04.2018,06.06.2018, 08.10.2018 மற்றும் 23.10.2018 ஆகிய தேதிகளில் நேரடியாக மனு அளித்தும் செயல் அலுவலர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் திரு.முஸ்தபா, தனது வீட்டை ஒட்டியுள்ள இடத்தில் 21 அடிக்கு அத்துமாலுக்கு கட்டியுள்ளதாகவும், இதற்கிடையில் அவர் தொடர்ந்து கட்டிடம் கட்டியுள்ளதால் சென்னை உயர் நீதி மன்ற மதுரைக் கிளையில் நீதிப்பேராணை எண்.23416/2018 என்ற எண்ணில் வழக்கு தொடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி வழக்கு இன்னும் விசாரணைக்கு வராமல் உள்ளதாகவும், தனது முறையிடு குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தனது வாக்குமூலத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். நிலக்கோட்டை பேரூராட்சியின் சுகாதார ஆய்வாளரும் வீடு கட்டும் நபரும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் என்பதால் உரிய நவடிக்கை எடுக்காமல் சட்ட விரோதமாக விதிகளை மீறி கட்டிடம் கட்ட அனுமதித்து விட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

24.01.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.அ.முருகேசன் தனது வாக்குமூலத்தில், தான் 31.03.2018 அன்று நிலக்கோட்டை பேரூராட்சியில் பணியில் இருந்து ஓய்வு பெற்றதாகவும் அதற்கு முன்னர் இரண்டு மாதம் மருத்துவ விடுப்பில் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். தான் பணியில் இருந்த காலத்தில் வழக்கில் உள்ள புகார் குறித்து எந்த புகாரும் வரவில்லை எனவும், மனுவில் சொல்லப்பட்டுள்ள திரு.முஸ்தபா என்பவர் விதி மீறி வீடு கட்டுவது குறித்து தனக்கு தெரியாது எனவும், திரு.ஜாபர் அலி என்பவர், தான் பணியில்

இருக்கும்போது துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்ததாகவும், இது போன்று விதி மீறல்கள் ஏதும் இருந்தால் அவர் கண்காணித்து அறிக்கை தருவார் எனவும் அதன் அடிப்படையில் செயல் அலுவலர் சென்று பார்த்து உரிய நடவடிக்கை மேற்கொள்வார்கள் எனவும் தெரிவித்துள்ளார். தற்போதைய செயல் அலுவலராக திரு.மு.கோட்டைசாமி என்பவர் உள்ளதாகவும், தனக்கு பின்னர் திரு.பி.செல்வராஜ் என்பவர் கூடுதல் பொறுப்பில் இருந்ததாகவும், திரு.செல்வராஜ் என்பவர் அம்மையநாயக்கனூர் பேரூராட்சி செயல் அலுவலராக முழு பொறுப்பிலும், நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பிலும் இருந்ததாகவும் தற்போது அவர் திண்டுக்கல் மாவட்டம், பாளையம் பேரூராட்சியில் செயல் அலுவலராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள திரு.மு.கோட்டைசாமி, திண்டுக்கல் மாவட்டம் ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலராகவும், நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பிலும் உள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

28.01.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் மேற்படி நிலக்கோட்டை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மேற்படி விதி மீறிய கட்டிடம் தொடர்பான உண்மை நிலை மற்றும் துப்புரவு ஆய்வாளரால் ஆய்வறிக்கை பெறப்பட்டிருப்பின் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்க நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

19.02.2019 நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பான 13.03.2019 நாளிட்ட மறு விசாரணைக்கு, 28.01.2019 நாளிட்ட அறிவிப்பாணயில் கோரிய அறிக்கைகளுடன் ஆஜராகத் தெரிவித்து நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

08.03.2019 நாளிட்ட நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில் முறையீட்டு மனுதாரரால் மேற்படி பொருள் தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் நீதிப்பேராணை எண். 23416/2018ல் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

26.03.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு தொடர்பாக மேற்படி நிலக்கோட்டை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரின் 28.01.2019 நாளிட்ட வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மேற்படி பேரூராட்சியில் விதி மீறி கட்டப்படும் கட்டிடங்கள் தொடர்பாக நிலக்கோட்டை பேரூராட்சியின் துப்புரவு ஆய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கையின் விவரம் மற்றும் முறையீட்டு மனுதாரரால் தொடரப்பட்டுள்ள வழக்கிற்கான பேரூராட்சி செயல்அலுவலரால் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வாதுரையின் நகல் ஆகிய விவரங்களை சமர்ப்பிக்க வலியுறுத்தி நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

01.04.2019 நாளிட்ட நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள திரு.ஜெ.முஸ்தபா, த/பெ திரு.எஸ்.ஜெ.ஜாபர், வெங்கட்ராமாபுரம் அக்ரஹாரத் தெரு, நிலக்கோட்டை என்பவரால் ஏற்கனவே உள்ள பழைய வீட்டின் பின்புறம் கட்டிட விஸ்தரிப்பு செய்ய அனுமதி கோரி 13.03.2018ல் விண்ணப்பம் செய்யப்பட்டதாகவும், மேற்படி விண்ணப்பம் செய்யப்பட்ட நாளில் நிலக்கோட்டை பேரூராட்சியில் பொறுப்பு செயல் அலுவலராக திரு.பெ.செல்வராஜ் என்பவர் பணியில் இருந்ததாகவும், அவர் தற்போது கோவை மாவட்டம், கருமத்தம்பாளையம் பேரூராட்சியில் பணிபுரிவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி விண்ணப்பம் 13.03.2018 அன்று நிலக்கோட்டை பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு.மு.ஜியாகான் என்பவரால் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து அப்போதைய பொறுப்பு செயல் அலுவலரால் கட்டிட உரிமத் தொகை செலுத்திட அறிவுறுத்தப்பட்டதின் பேரில், மனுதாரர் கட்டிட உரிமத்திற்கான கட்டணங்களை பேரூராட்சி வங்கிக் கணக்கில் செலுத்தியுள்ளதாகவும், இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் திரு.அ.வீரராஜன் என்பவரால் 13.04.2018ல் மேற்படி கட்டிடம் தொடர்பாக ஆட்சேபணை மனு அளிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர், மனுதாரர் திரு.எஸ்.ஜெ.முஸ்தபா மற்றும் முறையீட்டு மனுதாரர் திரு.அ. வீரராஜன் ஆகியோர்களுக்கு 04.05.2018 நாளிட்ட அறிவிப்பு கடிதத்தின் மூலம் ஆவணங்களுடன் நேரில் ஆஜராகி விளக்கமளிக்க அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 08.05.2018ல் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.அ. வீரராஜன் மற்றும் விண்ணப்பதாரர் திரு.எஸ்.ஜெ.முஸ்தபா ஆகிய இருவரிடமும் நேரடி தாவாவிற்குட்பட்ட இடத்தினை வருவாய்த் துறையின் மூலம் அளந்து அதன் விவரத்தினை தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டதாகவும், ஆனால் நில அளவையில் இருவருக்கும் உடன்பாடு ஏற்படாததால் திரு.வீரராஜன் என்பவரால் மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடரப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், மேற்படி வழக்கு தொடர்பான எதிர் வாதுரை இதுவரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை எனவும், மேலும் மேற்படி இடம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடரப்பட்ட நிலையில் திரு.எஸ்.ஜெ.முஸ்தபா என்பவருக்கு கொடுக்கப்பட்ட கட்டிட அனுமதி கோரிய விண்ணப்பம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரரால் புகாருக்குட்படுத்தப்பட்ட விதி மீறிய கட்டிடம் குறித்து நிலக்கோட்டை பேரூராட்சி சுகாதார ஆய்வாளரால் அறிக்கை ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

03.04.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் இப்பொருள் தொடர்பான இம்முறைமன்ற நடுவ 02.05.2019 நாளிட்ட விசாரணைக்கு உரிய அறிக்கைகளுடன் ஆஜராகத் தெரிவித்து நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

02.05.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தான் நிலக்கோட்டை பேரூராட்சியில் செயல் அலுவலராக கடந்த மூன்று மாதங்களாக முழு பொறுப்பில் உள்ளதாகவும், இதற்கு முன்னர் ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் மனு விவரம் தெரியும் எனவும், 23.10.2018ல் திரு.முஸ்தபா என்பவருக்கு புல எண். 471/19 வெங்கட்ராமாபுரம் அக்ரஹாரம் தெருவில், கட்டிட விதிகளை மீறி கட்டிடம் கட்டி வருவதாக தெரிவித்த முறையீட்டு மனுதாரரின் புகாரினையடுத்து ஒரு அறிவிப்பு மனுதாரருக்கு (திரு.எஸ்.ஜெ.முஸ்தபா) வழங்கப்பட்டு அதில் உடன் கட்டிடம் கட்டும் பணியினை நிறுத்திக் கொள்ளவும் 24 மணி நேரத்தில் விதிகளை மீறி கட்டியுள்ள கட்டிடத்தினை இடித்து அப்பறப்படுத்திக்கொள்ளவும் தெரிவித்து, தவறும் பட்சத்தில் பேரூராட்சி மூலம் மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தப்பட்டு அதற்கான தொகையினை வசூல் செய்ய நேரிடும் எனவும் தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார். திரு.முஸ்தபாவிற்கு அனுப்பிய அறிவிப்பில் முறையீட்டு மனுதாரரின் 23.10.2018 நாளிட்ட மனு விவரம் குறிப்பிடப்பட்டதாகவும், முறையீட்டு மனுதாரர் மீண்டும் 16.04.2018 அன்று செயல் அலுவலருக்கு இதே புகாரினை அனுப்பியுள்ளதாகவும், 11.04.2018ல் நிலக்கோட்டை

வட்டாட்சியருக்கு முகவரியிட்டு பேரூராட்சிக்கு நகல் அனுப்பியதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் ஆவண எண் 2645/1913 மற்றும் 1274/1974 ஆகியவற்றின் நகல்களையும் அனுப்பியிருந்ததாகவும், இதற்கிடையில் 13.03.2018 நாளிட்ட கடிதம் மூலம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வீடு கட்டுவதற்காக அனுமதி வேண்டி வரைபட விண்ணப்பதாரர் மனு செய்து 07.04.2018ல் உரிய தொகை செலுத்தி விட்டதாகவும், 18.03.2018ல் அலுவலக குறிப்பில் துப்புரவு ஆய்வாளரை கள ஆய்வு செய்திட பணிக்கப்பட்டதாகவும், துப்புரவு ஆய்வாளர் திரு.ஜாபர் அலி ஆய்வு செய்யும் போது சில தகராறு ஏற்பட்டதால் அவருக்கு பதிலாக இளநிலை உதவியாளர் திரு.ஜியாகான் என்பவர் கட்டிட அனுமதி தான் வாங்கித் தருவதாக சொல்லி திரு.முஸ்தபா அவர்களிடம் தொகையினையும் பெற்று பேரூராட்சியில் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அப்போது திரு.செல்வராஜ் என்பவர் செயல் அலுவலராக இருந்தார் எனவும் அதன் பின்னர் தான் பணியேற்றவுடன் புகாரினை பார்த்து கட்டிட அனுமதி வழங்காமல் நிறுத்தி விட்டதாகவும், இதுவரை பேரூராட்சி மூலம் கட்டிடம் கட்ட அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரர் மற்றும் கட்டிட அனுமதி கோரியவர் ஆகியோர் தினமும் தகராறு செய்ததால் நீதிமன்றத்தில் முறையீடு செய்து தீர்வு காணுமாறு தெரிவித்ததாகவும், அதன்பின்னர் முறையீட்டு மனுதாரர் மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் நீதிப்பேராணை எண்.23416/2018ல் வழக்கு தொடர்ந்ததாகவும், இவ்வழக்கில் நீதிமன்றத்தால் எந்த தடையாணையும் பிறப்பிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி நீதிப்பேராணையில் 4–வது எதிர் மனுதாரராக பேரூராட்சி செயல் அலுவலர் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், தற்போது யாரும் அலுவலகத்தில் வந்து தகராறு செய்வதில்லை எனவும் இப்பொருள் தொடர்பாக 01.04.2019ல் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் கட்டிட அனுமதி கோரிய விண்ணப்பம் நிறுத்தி வைக்கப்பட்டதையும், முன்னாள் செயல் அலுவலரால் குறிப்பிடப்பட்ட சுகாதார ஆய்வாளர் திரு.ஜாபர் அலி என்பவரால் தல ஆய்வு செய்ய முடியாத நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து இளநிலை உதவியாளர் திரு.மு.ஜியாகான் தல ஆய்வு மேற்கொண்டது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி பொருள் தொடர்பாக நிலக்கோட்டை பேரூராட்சி சுகாதார ஆய்வாளரால் ஆய்வறிக்கை ஏதும் சமர்ப்பிக்கும் நிலை எழவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இளநிலை உதவியாளர் தல ஆய்வு மேற்கொள்ளும்போது எதிர் மனுதாரர் திரு.முஸ்தபா அவருக்கு உறவினர் என்பதால் உறவினருக்கு சாதகமாக செயல்படுவதாக முறையீட்டு மனுதாரர் திரு.அ.வீரராஜன் கருத்து வேறுபாடு எழுப்பியதால் அவராலும் அறிக்கை ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், முறையீட்டு மனுதாரர் இது தொடர்பாக மனித உரிமை ஆணையத்திலும் புகார் செய்துள்ளதாக நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனுமீதான நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, நிலக்கோட்டை பேரூராட்சி முன்னாள்/இந்நாள் செயல் அலுவர்களின் வாக்குமூலங்கள் மற்றும் முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம் ஆகியன கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுவிலுள்ள பொருட்பாடு தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமமர்வில் நீதிப்பேராணை எண்.23416/2018ல் வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளதாக முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலும் இது குறித்து உறுதி செய்யப்பட்டுள்ளது.

2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றமொன்றில் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்திடலாகாது என வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பொருள் தொடர்பான தொடர் விசாரணையினை இம்முறைமன்ற நடுவம் கைவிடுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு மே திங்கள் 14-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//-

செயலாளர்.

பெறுநர்

1.திரு. அ.வீரராஜன்,
96-B, தேவர் திருநகர்,
நெல்லூர்,
ஆத்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்-624204.

2.செயல் அலுவலர்,
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திண்டுக்கல் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல்

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்) தகவலுக்காக.